## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி - 2016

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 இன் 15 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் என்பவற்றால் திருத்தப்பட்ட 1997 இன் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தின் 26(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணியின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டம் மற்றும் பின்னரான திருத்தங்கள் மூலம் வேண்டப்பட்ட தகவல்களை இந்த நிதிக்கூற்றுக்கள் தருகின்றன.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்கான சான்றாதாரமின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களுக்கெதிராகவும் சுட்டிக்காட்டப்பட்டவாறு பின்வரும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| விடயம் | தொகை<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு | | |
| - டச்சு வங்கி ஆழ்நிதி | 454,106 | வங்கி உறுதிப்படுத்தல், வங்கிக் கணக்கிணக்கங்கள் மற்றும் வங்கிக் கூற்றுக்கள் |
| - பீஓசீ சேகரிப்புத் தொகை (எம்ஜரீ) | (210,679) | |
| ஏனைய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் | 2,406,465,176 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| ஏனைய நிறுவனங்களிடமிருந்தான கடன்கள் | 35,170,740 | தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுடு நெலும் மூவ்மென்ற் (Sudu Nelum Movement) உடனான உடன்படிக்கைகள் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 12,181,978 தொகையான மிகைக் கடன் அறவீடுகள் உரிய வாடிக்கையாளர்களிற்கு தீர்ப்பனவு செய்யப்படாமல் ஒரு வருடத்திற்கு மேலாக ‘‘சம மாதாந்த தவணைக்கட்டண (ஈஎம்ஐ) மிகைக் கணக்கில்’’ காணப்பட்டன.

(ஆ) வங்கியின் பொதுவான நடைமுறையொன்றாக, காசு முற்பணங்கள் மற்றும் காசோலை முற்பணங்கள் முறையே 14 நாட்கள் மற்றும் 22 நாட்களினுள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், வெவ்வேறு நோக்கங்களிற்காக வங்கியால் வழங்கப்பட்ட ரூபா 455,125 மற்றும் ரூபா 4,459,266 கூட்டுத்தொகையான முறையே காசு முற்பணங்கள் மற்றும் காசோலை முற்பணங்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதற்கிணங்க தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஏனைய பொறுப்புக்களில் காட்டப்பட்ட ரூபா 17,953,267 தொகையில் ரூபா 6,178,828 தொகை தீர்ப்பனவு செய்யப்படாமல் மூன்று வருடங்களிற்கு மேலாக கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) வாடிக்கையாளரிடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக அறவிடப்பட்ட ரூபா 1,294,144 தொகை தெளிவுபடுத்தப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(உ) பெறவேண்டியவைகளாக வைப்புக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 896,175 தொகையில் ரூபா 613,325 அல்லது 68 சதவீதம் மற்றும் ரூபா 219,100 அல்லது 24 சதவீதம் ஆன தொகைகள் முறையே 5 – 10 ஆண்டுகளிற்கிடைப்பட்ட காலமாகவும், 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் நிலுவையாக இருந்தன. எவ்வாறாயினும், இந்த வைப்புக்கள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் மீளாய்வாண்டின் இறுதிவரை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விஷேட கடன்பட்டோர் கணக்கிலுள்ள நிலுவை மீதி ரூபா 736,405 தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 144,958 தொகை 2006 தொடக்கம் நிலுவையாக இருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) 1997 இன் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் IV ஆம் பகுதியின் 16(2) ஆம் பிரிவு | வங்கியின் வழங்கப்பட்ட மூலதனம் ரூபா 1,000 மில்லியனாக இருக்க வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 962,092,936 ஆக இருந்தது. |
| (ஆ) வங்கி அதிகாரச்சட்டத்தின் 6.1 ஆம் நெறிப்படுத்தலிலுள்ள 4(1)(iv) ஆம் பிரிவு, 2012 இன் 02 ஆம் நெறிப்படுத்தல் மற்றும் வங்கியின் வெளிவளமூலக் கொள்கை – 2014 | வங்கியின் அறவீட்டுச் செயன்முறையை துரிதப்படுத்தும் வகையில் வெளியேயுள்ள கம்பனியொன்றை தெரிவு செய்வதற்காக இந்த ஏற்பாடுகளுடன் வங்கி இணங்கியிருக்கவில்லை. |
| (இ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 133(4)(அ) பிரிவு மற்றும் அதற்கான திருத்தங்கள் | 2016 ஆம் ஆண்டின் போது வங்கியால் பிரயோகிக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரி வீதங்கள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஈ) 2006 ஒக்தோபர் 05 ஆம் திகதிய 1465/19 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் (அதிவிஷேட) 10(ஆ) பந்தி | 2015 யூலை 01 தொடக்கம் 2016 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான வேதனங்கள் மீது ஊழியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 233,450 தொகையான முத்திரைத் தீர்வை 2017 மார்ச் 24 வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2008 சனவரி 01 ஆம் திகதிய 1530/13 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் (அதிவிஷேட) 10 ஆம் பந்தி | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கடன் வசதிகளை அளிக்கும் நேரத்தில் 2015 யூலை 01 தொடக்கம் 2016 செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதியின் போது வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 1,062,575 முத்திரைத் தீர்வையை வங்கி அனுப்பியிருக்கவில்லை. |
| (ஊ) | நிதித்துறைகளின் ஒன்றிணைப்பு மீது பிரதான திட்டத்துடன் சேர்த்து வழங்கப்பட்ட 2014 சனவரி 17 இன் 02/17/402/0073/002 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) நெறிப்படுத்தல் | வங்கியானது 2018 சனவரி 01 இல் உள்ளவாறு அதன் உள்ளக மூலதன மீதியாக ரூபா 5,000 மில்லியனை பேண வேண்டிய போதிலும் இந்த தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (நிபி.) நிபி. 757(2) | மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களை சரிபார்ப்பதற்காக வங்கியால் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2003 யூன் 02 இன் பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 5 ஆம் அத்தியாயத்தின் 5.2.4 ஆம் பிரிவு | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக வரைபுப் பாதீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வங்கியானது இதனுடன் இணங்கியிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு 2015 திசெம்பர் 18 இலேயே சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) 9 ஆம் அத்தியாயத்தின் 9.2(ஆ) மற்றும் (ஈ) பிரிவுகள் | நிறுவனமானது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு வரைபடத்தை கொண்டிருக்க வேண்டியதுடன் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் இது பதிவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், வங்கியானது இந்த ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. |
| | (iii) 9 ஆம் அத்தியாயத்தின் 9.3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தை ஒவ்வொரு தொழில்முயற்சியும் கொண்டிருக்க வேண்டியதுடன், இது சபையாலும் பொதுத் திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் ஒருமைப்பாட்டுடன் உரிய அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வங்கியில் அத்தகைய திட்டமெதுவும் காணப்படவில்லை. |
| (ஐ) | அரசாங்க பெறுகை வழிகாட்டி – 2006 மற்றும் 2009 யூன் 4 ஆம் திகதிய பிஎவ்/429(i) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | வங்கியானது பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அதன் பெறுகை நோக்கங்களிற்காக விஷேட கொள்வனவுக் கைநூலை பயன்படுத்துகின்றது. அதேநேரம், |

வங்கியானது அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றுவதற்குப் பதிலாக இந்த அங்கீகரிக்கப்படாத கைநூலை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 82 மில்லியன் மொத்தப் பெறுமதியான 1,669 விடயங்களை கொள்வனவு செய்திருந்தது.

(ஒ) வங்கியின் கடன் அறவீட்டுக் கைநூல்

| | |
|---|---|
| - 4.1.1 ஆம் பிரிவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்ட ஆதனங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 23,291,154 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 12,138,322 இற்கு சமமான 52 சதவீதம் பத்து ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன. |
| - 4.1.5 ஆம் பிரிவு | கையளிக்கப்பட்ட ஆதனங்களின் மீள்மதிப்பீடு உள்ளக மதிப்பீட்டாளர் ஒருவரால் ஆகக்குறைந்தது 2 ஆண்டுகளிற்கு ஒருமுறை அல்லது வெளியிலுள்ள மதிப்பீட்டாளர் ஒருவரால் 4 ஆண்டுகளிற்கு ஒருமுறை செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 6,311,250 தொகையான கையளிக்கப்பட்ட ஆதனங்கள் வேண்டப்பட்டவாறு மீள்மதிப்பீடு செய்யப்படாமல் 2 – 6 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் காணப்பட்டன. |
| - 3.4.7 ஆம் பிரிவு | கையளிக்கப்பட்ட ஆதனங்களை ஏலமிடுதல் மூலம் சேகரிக்கப்பட்ட மிகைப் பணம் உரிய வாடிக்கையாளர்களிற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 472,448 தொகையான மேலதிகப் பணம் மீளாய்வாண்டின் போது வங்கியால் உரிய வாடிக்கையாளர்களிற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,009 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 848 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 161 மில்லியன் அல்லது 16 சதவீத வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் கடன்களிற்கான வட்டிச் செலவினங்கள் மற்றும் நட்டக்கழிவுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்களில் ஏற்பட்ட பொருண்மையான அதிகரிப்பே இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், வெவ்வேறு கட்டங்களில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | 2016<br>-----------<br>ரூபா. மில்லியன் | 2015 (மீளக் குறிப்பிடப்பட்டது)<br>---------------------------<br>ரூபா. மில்லியன் | முரண் சாதகமானது (பாதகமானது)<br>-----------------------<br>சதவீதம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 5,472 | 4,660 | 17 |
| வட்டிச் செலவினங்கள் | (3,509) | (2,539) | (38) |
| **தேறிய வட்டி வருமானம்** | **1,963** | **2,121** | **(7)** |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 347 | 253 | 37 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறியது) | 108 | 12 | 800 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **2,418** | **2,386** | **1** |
| கடன்களிற்கான நட்டக்கழிவு கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | 161 | 89 | (81) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **2,257** | **2,297** | **(2)** |
| பதவியணிக் கிரயம் | 895 | 829 | (8) |
| ஏனைய செலவினங்கள் | 514 | 459 | (12) |
| **பெறுமதி சேர்க்கைக்கு முன்னரான செயற்பாட்டு வருமானம்** | **848** | **1,009** | **(16)** |
| **வரி** | | | |
| நிதிச் சேவைகள் மீதான வற் | 188 | 206 | 9 |
| வரிச் செலவினங்கள் | 270 | 294 | 8 |
| **ஆண்டிற்கான இலாபம்** | **390** | **509** | **(23)** |

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

### முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் அண்டிற்கான வங்கியின் தேறியலாப விகிதமானது 9.31 சதவீத துறை விகிதத்தை விடக் குறைவாக உள்ள 6.58 சதவீதத்தை அறிக்கையிட்டிருந்தது

(ஆ) சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் 1 சதவீத துறை சராசரியுடன் ஒப்பிடுகையில் 0.89 சதவீதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 33 சவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) சராசரி பங்குதாரர்கள் நிதியம் மீதான திரும்பல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 32 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஈ) பங்கொன்றிற்கான உழைப்பு மற்றும் பங்கொன்றிற்கான சந்தைப் பெறுமதி என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு முறையே 23 சதவீதம் மற்றும் 30 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் (என்பிஎல்)**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதி ரூபா 31,052 மில்லியனாக இருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறான செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 5,300 மில்லியனாக அல்லது 17.58 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், இது 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே 20.77 சதவீதம் மற்றும் 22.57 சதவீதம் ஆக இருந்தது.

**(ஆ) வங்கியின் கடன்கள்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளிற்கான வங்கியின் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் பின்வருமாறுள்ளது.

| | 2016<br>ரூபா.<br>மில்லியன் | 2015<br>ரூபா.<br>மில்லியன் | 2014<br>ரூபா.<br>மில்லியன் | 2013<br>ரூபா.<br>மில்லியன் | 2012<br>ரூபா.<br>மில்லியன் |
|---|---|---|---|---|---|
| மொத்தக் கடன்கள் | 8,863 | 9,037 | 6,213 | 5,257 | 3,214 |
| பங்குதாரர் நிதிகள் | 3,728 | 3,364 | 2,886 | 2,575 | 2,391 |
| உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் | 2.38 | 2.69 | 2.15 | 2.04 | 1.34 |

பங்குதாரர் நிதி 10.82 சதவீதத்தால் அதிகரித்ததன் விளைவாக 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கியின் மொத்தக் கடன்கள் முன்னைய ஆண்டினை விட 1.9 சதவீதத்தால் சிறதளவு குறைவடைந்திருந்தது. வங்கியின் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் முன்னைய நான்கு ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் ஒப்பிடுகையில் 11.52 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. ஆகையால், வங்கியானது கடனுடனான அதன் வளர்ச்சிக்கு நிதியிடுவதில் தீவிரமாக இருக்கின்றமையை உயர் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் பொதுவாக காட்டுகின்றது.

(இ) ரூபா 7,372,852 தொகையான ஈபிஎவ் கடன்கள் 18 மாதங்களிற்கு மேலாக நிலுவைகளாக இருந்தன. இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட ஈபிஎவ் இலிருந்து அக்கடன்களை அறவிடுவதற்கான சாத்தியத்தன்மை காணப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 31 இன் இறுதி வரையிலும் அக்கடன் மீதிகளை அறவிடுவதற்கான திருப்திகரமான நடவடிக்கைகள் எதனையும் வங்கி எடுத்திருக்கவில்லை.

(ஈ) வங்கியின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான வாடிக்கையாளர் வைப்புக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்கள், தேறிய வட்டி வருமானம் மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் தொடர்பில் இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கு இடையில் 29 சதவீதம் தொடக்கம் 71 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன.

| **விடயம்** | **கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் இலக்கு** | **உள்ளபடியானது** | **முரண்** |
|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் | 45,450 | 32,123 | 29 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 50,500 | 30,260 | 40 |
| தேறிய வட்டி வருமானம் | 3,334 | 1,960 | 41 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 2,252 | 660 | 71 |

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 8,372,529 தொகை வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படாமல் மீளாய்வாண்டிற்கான கடன் நிர்வாகக் கட்டணங்கள் மீதான நட்டமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது முன்னைய ஆண்டுகளில் தேறாத வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 14,418,413 நிலுவைக் கடன் மீதிகளை அறவிடும் நோக்கத்திற்காக 31 கையளிக்கப்பட்ட ஆதனங்களை வங்கி விற்பனை செய்திருந்தது. இதனால் ரூபா 9,358,213 நட்டமொன்று வங்கிக்கு ஏற்பட்டிருந்தது.

(இ) 2016 ஏப்ரல் 29 இன் பிஈடி 03/2016 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக ஊழியர்களின் தனிப்பட்ட வேதனங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை (பிஏவைஈ) கழிக்காமல் வங்கியானது அதன் ஊழியர்கள் சார்பில் அதன் சொந்த நிதியத்தை உருவாக்கி மீளாய்வாண்டின் போது ரூபா 18,249,288 உழைக்கும் போதே செலுத்தும் வரியை செலுத்தியிருந்தது. 2016 திசெம்பர் மாதத்திற்கான மிகையூதியக் கொடுப்பனவுகள் மீதான உழைக்கும் போதே செலுத்தும் வரி (பிஏவைஈ) ரூபா 3,205,619 ஆக இருந்த போதிலும் வங்கியானது ரூபா 3,256,008 தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தியிருந்தது. ஆகையால் ரூபா 50,389 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) லங்கா எலெக்ரிசிற்றி கம்பனி லிமிட்டட்டிடமிருந்து பாதுகாப்பு வைப்பை பெற்றுக்கொள்ளாமல் மீள்நிதிக் கடன் வசதியை வங்கி வழங்கியிருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 731,385 வட்டியை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(உ) சீ வங்கிப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 25,000,000 முதலீட்டிலிருந்து 2015 ஆம் ஆண்டிலிருந்து எந்த வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை.

**4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் மனித வளங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட முகாமையாளர், கனிஷ்ட நிறைவேற்றுனர் மற்றும் சாரதி/ அலுவலக உதவியாளர் வகைப்படுத்தலின் கீழுள்ள 09 பதவிகள் மிகையாக இருந்ததுடன் 54 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன.

(ஆ) வங்கி உதவியாளர் தரம் IV பதவியிலுள்ள நான்கு உத்தியோகத்தர்கள் மற்றும் தரம் VI 2 இலுள்ள ஒரு வங்கி உதவியாளர் 2016 ஆம் ஆண்டின் போது உதவி நிறைவேற்றுனர்கள் மற்றும் உதவி முகாமையாளர் தரம் IV ஆக பதவியுயர்த்தப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், இந்தப் பதவிகள் வங்கியின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீதிமன்ற எழுதுநர் பதவிக்கான வேலைவாய்ப்பு விளம்பரம் 2015 திசெம்பர் 20 இல் வார இறுதிப் புதினப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட போதிலும் தெரிவுசெய்யப்பட்ட நான்கு விண்ணப்பதாரிகளும் பத்திரிகை விளம்பரத்திற்கு முன்னர் அவர்களுடைய விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். விளம்பரத்தின் பிரகாரம், க.பொ.த (உ/த) இல் மூன்று சித்திகள் மற்றும் கணிதம், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிற்கான திறமைச் சித்தி உள்ளடங்கலாக க.பொ.த (சா/த) இல் ஐந்து திறமைச் சித்திகளையும் விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மேற்படி பதவிகளிற்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பதவிக்கு தேவையான தகைமைகளை கொண்டிருக்கவில்லை.

(ஈ) முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல் இரண்டு கிளை முகாமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டின் போது இரண்டு அலுவலக உதவியாளர்களை வங்கி ஆட்சேர்ப்புச் செய்திருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே 7 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் வங்கியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| சொத்து முகாமைத்துவம் | - கிளைகளிலிருந்து/ கிளைகளிற்கான நிலையான சொத்துக்களின் நகர்வு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.<br>- சில சொத்துக்கள் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட போதிலும் கிளைகளில் பௌதீகரீதியாக காணப்படவில்லை.<br>- அகற்றப்பட்டதென குறிப்பிடப்பட்ட சில சொத்துக்கள் கிளைகளில் பௌதீகரீதியாக காணப்பட்டமை<br>- வங்கியின் ஆதனப் பிரிவால் 2016.12.31 இல் உள்ளவாறு சில சொத்துக்கள் புதிய சேர்த்தல்களாக இனங்காணப்பட்டிருந்தன. எவ்வறாயினும், பௌதீக செவ்வையின் போது அவை பழைய பொருட்களாக இனங்காணப்பட்டு சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.<br>- சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு கொள்வனவுத் திகதியை கருத்திற்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>- வங்கியில் அகற்றப்படும் பொருட்கள் தொடர்பில் முறையான கணக்கீட்டு பதிவுமுறை காணப்படாமை<br>- மோட்டார் வாகனங்களினை அகற்றுவதற்கான அங்கீகாரங்கள், அகற்றல்கள் மீதான விற்பனைப் பெறுவனவுகள் மற்றும் அகற்றல் திகதி தொடர்பான ஆவணச்சான்றுகள் காணப்படாமை. |
| கிளைச் செயற்பாடுகள் | - சில கிளைகளின் தங்கநகை அடகு பாதுகாப்பு அறைகளில் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.<br>- பாம் ரொப் (Palm Top) உதவியாளர்களுடாக கணக்குகளை திறக்கும் போது உரிய வாடிக்கையாளர்களிற்கு கணக்கு புத்தகத்தை கையளித்தல் தொடர்பான சான்றுகள் காணப்படவில்லை.<br>- கிளைகளில் பாம்ரொப் (Palmtop) காசு சேகரிப்பு சார்பில் மேம்படுத்தல் உதவியாளர்களிற்காக ரூபா 300,000 காப்புறுதி எல்லையை விஞ்சிய சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் | - சான்றிதழ்களின் முதிர்ச்சித் திகதியின் பின்னர் சில ''தனநிடன'' கணக்குகளில் வட்டி கணிப்பிடப்பட்டிருந்தன. |
| கணக்கீடு | - செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணக்கு மற்றும் இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திரும்பல்கள் என்பவற்றின் வயதுப்பகுப்பாய்விற்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டமை.<br>- 408 ஈடுவைக்கப்பட்ட கடன்களிற்கான செயன்முறைக் கட்டணம் தொடர்பாக கடன் செயற்பாடுகள் கைநூலின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டியல் மற்றும் கணக்காய்வுக் கணிப்பீடுகளிற்கிடையே வேறுபாடு காணப்பட்டமை. |